2006 ஆகஸ்ட் 31]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 123, திரு. பெ. காமராஜ், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

123—

பேருந்து வசதி

***1081—திரு. பெ. காமராஜ்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி பழனிக்குச் செல்ல தோகைமலை, தரங்கம்பட்டி, பாளையம், கோவிலூர், வேடசந்தூர், ஒட்டன்சத்திரம் வழியாகப் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி–பழனி வழி மணப்பாறை, வையம்பட்டி, திண்டுக்கல், ஒட்டன்சத்திரம் வழித்தடம் தேசிய நெடுஞ்சாலையில் இயக்கப்படுகிறது. அதன் பயண நேரம் சுமார் 4–00 மணி நேரம் ஆகும். ஆனால், திருச்சி–பழனி வழி தோகைமலை, தரங்கம்பட்டி, பாளையம், கோவிலூர், வேடசந்தூர் கோரிக்கை வழித்தடம் கிராமப்புறம் மற்றும் மாவட்டச் சாலைகள் இணைக்கப்பட வேண்டியதாகும். அதன் பயண நேரம் சுமார் 5–30 மணி நேரம் ஆகும். எனவே, நேரடியாகச் செல்லும் பயணிகள் இவ்வழித்தடத்தில் பயணம் செய்ய விரும்பமாட்டார்கள். தோகைமலை, தரங்கம்பட்டி, பாளையம், வேடசந்தூர் போன்ற பகுதிகளிலிருந்து பழனிக்குப் பயணம் செய்ய கீழ்க்கண்டவாறு பேருந்து வசதிகள் உள்ளன. தோகைமலை பகுதி மக்கள் குளித்தலை, மணப்பாறை வழி தோகைமலை வழித்தடத்தில் இயக்கப்படும் திருச்சி மண்டல 13 பேருந்துகள் 96 நடைகள், தனியார் துறை பேருந்துகள் மூன்றின்மூலம் 20 நடைகள் இயக்கப்படும் பேருந்துகளில் மணப்பாறை வந்தடைந்து பழனி செல்ல ஏதுவாக உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொன்ன அனைத்து வழித்தடங்களும் என்னுடைய தொகுதியை ஒட்டியே செல்லவில்லை. நான் கூறிய வழித்தடங்கள் அனைத்தும் ஸ்ரீரங்கம், குளித்தலை, கிருஷ்ணராயபுரம், அரவக்குறிச்சி, வேடசந்தூர், ஒட்டன்சத்திரம் இப்படியாக 6 தொகுதி மக்களும்

பயன்பெறும் வகையில் இடையில் இருக்கும் கிருஷ்ணராயபுரம் என்னுடைய தொகுதி மக்களும் பயன்பெறும் வகையில்தான் இந்தக் கேள்வியை நான் கேட்டுக்கொண்டிருக்கிறேன். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்னுடைய தொகுதி மக்களின் கோரிக்கையை ஏற்று வருங்காலத்தில் பழனிக்குச் செல்வதற்கு ஏதுவாக ஒரு பேருந்து இயக்கிடவேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணராயபுரம் தொகுதிக்கு இடது புறமும், வலது புறமும், இரண்டு பக்கமும் தேசிய நெடுஞ்சாலைகள் போகின்றன. ஒரு பக்கம் திண்டுக்கல் சேருகிறது. கரூரிலிருந்து திண்டுக்கல் சாலையும் இருக்கிறது. அதனால்தான் உள் கிராமங்களில் இருந்து நேரடியாகப் பழனிக்குச் செல்லக்கூடிய பயணிகள் அடர்வு அதிகமாக இருக்காது என்ற காரணத்தால்தான் பேருந்து விடுவதற்கு இப்போது எண்ணம் இல்லை என்று சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைக் கேட்டு, நம்முடைய அதிகாரிகளை அனுப்பி அது சரியாக இருக்குமானால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையைப் பரிசீலிக்கலாம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.*

திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், போளூரிலேயிருந்து கலசப்பாக்கம் வழியாக பெங்களூருக்குச் சென்ற அரசுப் பேருந்து தற்போது நிறுத்தப்பட்டுள்ளது. அதை உடனடியாக இந்த அரசு இயக்குவதற்கு முன்வருமா என்பதையும், அதேபோல், கலசப்பாக்கம் தொகுதியினுடைய தலைமையிடமாக இருக்கிற கலசப்பாக்கத்திலே யிருந்து, மாநிலத்தினுடைய தலைநகராக இருக்கிற சென்னை மாநகருக்குத் தனியாக ஒரு பேருந்து இயக்க இந்த அரசு முன்வருமா என்பதையும் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.*

முற்பகல் 9–50

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலம் விட்டு மாநிலம் நம்முடைய பேருந்துகள் செல்கின்றபோது, அதுபற்றி மற்ற மாநிலத்தோடு பேசி முடிவு செய்ய வேண்டிய ஒரு நிலையிருக்கிறது. அது விரைவிலே, இந்த மாதம்*

2006 ஆகஸ்ட் 31]

அல்லது அடுத்த மாத ஆரம்பத்திலே அந்தக் கூட்டம் கூட்டப்பட இருக்கிறது. அவர்களோடு ஒப்பந்தம் செய்துகொண்ட பின்னர்தான், ஏற்கெனவே நிறுத்தப்பட்ட பேருந்துகளை மீண்டும் இயக்க முடியும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதி, கலசப்பாக்கத்திலிருந்து சென்னைக்குப் பேருந்து கேட்டிருக்கிறார்கள். ஆய்வுசெய்து அதைப் பற்றி யோசிக்கலாம்; ஆய்வுசெய்து பேருந்து விடுவதைப் பற்றி யோசிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கூ.ந. சேகரன்.

திரு. கூ.ந. சேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நோயினால் பாதிக்கப்பட்ட ஏழையெளிய மக்கள் நகரங்களிலே பல்வேறு மருத்துவமனைகளுக்குச் செல்கிறார்கள். அவர்கள் எல்லாம் அந்த மருத்துவமனைகளுக்குச் செல்கிற வகையிலே, அவர்களுடைய நலன் கருதி, பேருந்துகளை Medicare Special என்கின்ற வகையிலே அந்தப் பேருந்துகளையெல்லாம், நோயாளிகளினுடைய வசதிக்காக இயக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை அதுபோல் ஓர் எண்ணம் இல்லை. ஏற்கெனவே உங்களுக்கு எல்லாம் தெரியும். பேருந்திலே சிறிய, சிறிய உதவிகள், மருத்துவ உதவிகள் செய்கின்ற அளவிலே, மருந்துகள் இருக்கின்ற kit ஒன்று இருக்கும். அதுதான் இதுவரை இருந்துகொண்டிருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் இப்போது சொல்கின்ற அந்தப் பணி என்பது அவ்வளவு எளிதான பணி அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பிச்சாண்டி.

திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெங்களூர் மாநகர பேருந்துக் கழகத்தின் சார்பாக Medicare Special என்ற bus–கள் இயக்கப்பட்டு, அரசு மருத்துவமனை, தனியார் மருத்துவமனைகளையெல்லாம் இணைத்து, வெற்றிகரமாகச் செயலாற்றிக் கொண்டிருக்கின்றன. கிராமப்புறங்களிலே இருந்து வருகின்ற நோயாளிகள் நம்முடைய கோயம்பேட்டிலேயிருந்து அரசு மருத்துவமனைகளுக்கும் தனியார் மருத்துவமனைகளுக்கும் செல்ல ஏதுவாக படுக்கை வசதியோடு கூடிய Medicare Special பேருந்துகளை, பெங்களூர் போல இயக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

[2006 ஆகஸ்ட் 31

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரே ஒரு fleet owner, பேருந்து உரிமையாளர். மற்ற மாநிலங்களைக்காட்டிலும் தமிழ்நாட்டிலே மிகக் குறைவானக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. பெங்களூரிலே இயக்குகிறார்கள் என்று சொன்னால், டீசல் விலை எப்போது ஏற்றப்படுகிறதோ, அந்த நிமிடத்திலே, அவர்கள் பேருந்துக் கட்டணத்தையும் ஏற்றுகிறார்கள். அதனால் அவர்களால் நினைத்த காரியங்களைச் செய்ய முடிகிறது. Medicare Special Bus என்று சொன்னால், அதற்குக் கூடுதலான செலவாகும். அதுகுறித்து நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்து பேசி, அவருடைய ஒப்புதல் பெற்றுதான் அதைச் செய்ய இயலும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் ஒவ்வொரு பேருந்திலும் இந்த முதலுதவிப் பெட்டி kit இருப்பதாகச் சொன்னார்கள். kit இருக்கிறது. ஆனால், அதன் உள்ளே எதுவுமே இல்லை. அதிலே மருந்தோ, டிஞ்சரோ, எதுவுமே இல்லை என்பதை அமைச்சர் அறிவாரா? இனி வருங்காலங்களிலாவது அந்த முதலுதவிப் பெட்டியிலே கட்டாயம் இன்னின்ன மருந்துப்பொருட்கள் வைக்கப்பட வேண்டும் என்கிற ஒரு சட்டத்தை இயற்றியாவது அல்லது ஓர் ஆணையைப் பிறப்பித்தாவது அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலத்தில் உள்ள அரசு ஆணை அப்படி. ஒரு மருத்துவமனையிலிருந்து இன்னொரு மருத்துவமனைச் செல்வதற்கு 1 கிலோ மீட்டர், 5 கிலோ மீட்டர், 10 கிலோ மீட்டர் என்று இடைவெளி இருந்த காலத்தில், மருத்துவர்கள் அதிகம் இல்லாத காலத்தில், பேருந்துகளிலே அந்த ஏற்பாடு செய்யப்பட்டது. இப்போது 100 அடிக்கு ஒரு மருத்துவர் இருந்து கொண்டிருக்கிறார். ஆனாலும், இந்த kit என்று வைத்தால், உடனடி சிகிச்சை செய்வதற்கான அந்த மருந்துகள் அதில் வைக்க ஏற்பாடு செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 124, திரு. கோவை தங்கம், மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்.